# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 03.08.2026

## முன்னிலை

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)

## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 390/SCIC/2024**

திருமதி.பவானி - மேல்முறையீட்டாளர்
எண்.7/1, அன்னை இந்திரா காந்தி சாலை
பாக்கியலட்சுமி நகர்
மதுரவாயல் ஏரிக்கரை
திருவள்ளூர் - 600 095
Phone: 8925407368

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
பிரிவு அலுவலர்
உள் (குடியுரிமை) துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **18.10.2023** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 20.11.2023 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 08.01.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 18/10/2023 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ பிரிவு அலுவலர், உள் (குடியுரிமை) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு அனுப்பி, அதில் “Please furnish me a list of Circular / G.O. issued by the Department for the protection of Women witnesses in accordance with the Witness Protection Scheme 2018.” என்பன போன்று 14 (பதினான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.பவானி அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம்

(மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.த.மா.சரஸ்வதி, பிரிவு அலுவலர், உள் (குடியுரிமை) துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்கள் ஆஜராகி, மனுதாரரின் இதே பொருண்மை கொண்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவின் அடிப்படையில் வழக்கு SA 21731/SCIC/2023 ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவ்வழக்கின் மீது 30/09/2025 மற்றும் 01/04/22026 ஆகிய தேதிகளில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **மனுதாரரின் ஒத்த பொருண்மை கொண்ட பிரிவு 6(1)-ன் கீழான மனுவின் அடிப்படையிலான வழக்கு ஏற்கனவே ஆணையம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகத் தவறியுள்ளார். எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 390/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
பிரிவு அலுவலர்
உள் (குடியுரிமை) துறை
தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி.பவானி
எண்.7/1, அன்னை இந்திரா காந்தி சாலை
பாக்கியலட்சுமி நகர்
மதுரவாயல் ஏரிக்கரை
திருவள்ளூர் - 600 095
Phone: 8925407368

RG/Sr.PC